# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அரையாண்டுத் தேர்வு

## 2018 - 2019

## தமிழ்மொழி

### வளர் தமிழ் 4

சுட்டெண்:.............................................. நேரம்: 120 மணித்துளிகள்

www.tamiledc.com

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. முதல் எழுத்துகள் ______________ .
   ( 247, 216, 30 )

2. ஆடிப்பிறப்பன்று ______________ ஆடிக்கூழ் காய்ச்சுவர்.
   ( காலையில், மாலையில், இரவில் )

3. முழங்கல் என்பதன் பொருள் ______________ .
   ( ஒலித்தல், ஒழித்தல், ஒளித்தல் )

4. தோண்டத் தோண்ட ஊறுவது ______________.
   ( கடல், அறிவு, கிணறு )

5. தன் கொடியில் வீணையை முத்திரையாகக் கொண்ட மன்னன் ______________ .
   ( சங்கிலியன், எல்லாளன், இராவணன் )

6. ______________ பெற்றோரைப் பேண மறவாதே!
   ( எனது, உனது, தனது )

7. **நொடி:** இரவெல்லாம் பூங்காடு, பகலெல்லாம் வெறுங்காடு.
   அது என்ன? ______________ .
   (வானம், மேளம், கதிரவன்)

8. குழந்தை ______________ என நடந்து வந்தது.
   ( குறுகுறு, குளுகுளு, குடுகுடு )

9. காகம் கரையும். அதுபோல் மயில் ______________.

( கூவும், அகவும், கத்தும் )

10. தன்னை விரும்புகிறவன், மற்றவருக்குத் ______________ செய்யக் கூடாது.

( தீங்கு, உதவி, நன்மை )

11. தோலினால் ஆன இசைக்கருவிகளை ______________ என அழைப்பர்.

( நரம்புக்கருவி, துளைக்கருவி, தோற்கருவி )

12. நண்பரிடம் பிழை கண்டால் ______________ க் கொள்ள வேண்டும்.

( விலகி, பொறுத்து, வெறுத்து )

13. இங்கே பல நூல்கள் உள்ளன. ______________ ஒன்றை நீ தேர்ந்து எடு.

(இவற்றுள், அவற்றுள், ஒவ்வொன்றும்)

14. **பழமொழி:** இனிய நண்பனை ______________ அறியலாம்.

( இடுக்கணில், சினத்தில், மகிழ்வில் )

15. குருவி மரத்தில் கூடு கட்டி______________.

(வாழ்ந்தன, வாழ்ந்தது, வாழ்கின்றன )

16. **90** என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ______________.

(தொண்ணூறு, தொன்னூறு, தொந்நூறு)

17. எமது முன்னோர் ______________ வடிவில் யாழைப் படைத்தனர்.

(வில்லின், நாணின், அம்பின்)

18. தமிழரது எதிர்காலம் ______________ தங்கியுள்ளது.

( சுற்றுலாவில், உணவில், கல்வியில் )

19. காட்டில் செருக்குடன் வாழ்ந்த விலங்கு ______________ .

( முயல், சிங்கம், யானை )

20. நான் நேற்று, தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகளைப் ______________ .

(பார்த்தேன், பார்க்கிறேன், பார்ப்பேன்)

21. "கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்னும் பாடல் வரி இடம் பெற்ற நூல் ______________ .

(மூதுரை, நல்வழி, நாலடியார் )

22. இயல் இசை நாடகம் என்பன ______________ .

( முப்பால், முத்தமிழ், முக்கனி )

23. **குறள்:** அறிவுடையார் எல்லாம் உடையார் ______________
என்உடைய ரேனும் இலர்.

( அறிவிலார், அறிவுடையார், அறியாதார்)

24. தாய்நாட்டையும் தாய்மொழியையும் ________________ வேண்டும்.

( போற்ற, இகழ, தூற்ற )

25. அரசன் கொடை வழங்கும்போது, ஒலிக்கும் முரசு ________________ .

(படைமுரசு, கொடைமுரசு, மணமுரசு)

26. அஞ்சல் என்பதன் வேறு பெயர் ________________.

( மடல், தாள், நூல் )

27. கரடி அகிலனை ________________ பார்த்தது.

(சேர்ந்து, கரைந்து, முகர்ந்து)

28. கார்முகிலைக் கண்டால் மயில் ________________ த் தொடங்கும்.

( ஓட, பாட, ஆல )

29. **ஒலிவட்டு:** தமிழருடைய புத்தாண்டு நாள் ________________.

(ஆடிப்பிறப்பு, மாட்டுப்பொங்கல், தைப்பொங்கல்)

30. அறிவுள்ளவர்கள் ________________ இருப்பர்.

(அறிவிலியாக, அடக்கமாக, கோபமாக)

புள்ளிகள் 30

2) **கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.**

| | | |
|---|---|---|
| ஐயந்திரிபற | பளபள | மணிமணியாக |
| அப்பொழுது | பரிசு | |

1. மறவன் கல்வியை ________________ க் கற்றுள்ளான்.
2. வேழன் பாவலனுடன் விளையாடிக் கொண்டிருந்தான். ________________ மழை தூறத் தொடங்கியது.
3. கதிரவனின் ஒளியால் கடல் நீர் ________________ என மின்னியது.
4. சிறுவனின் கையெழுத்து ________________ உள்ளது.
5. வன்னியா தம்பிக்குப் ________________ கொடுத்தாள்.

புள்ளிகள் 05

**3) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. நான் நாளை மாலை நீச்சல் வகுப்புக்குச் ________________.

2. நீரின்றி எம்மால் உயிர் வாழ ________________.

3. விருந்தோம்பல் பற்றித் திருக்குறளில் சிறப்பாகக்

________________.

4. உலகில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள்

________________.

5. நல்ல நண்பர்களின் நட்பே நமக்கு உயர்வைத்

________________.

புள்ளிகள் 10

**4) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

நாம் தூய்மையாக வாழ வேண்டும். குளித்தல், கை கால்களைக் கழுவுதல், பல் துலக்குதல், தூய்மையான ஆடைகளை உடுத்தல் என்பனவற்றை நாம் நாள்தோறும் செய்தல் வேண்டும். அத்துடன் நமது அறைகளையும் தூய்மையாக வைத்திருக்கவேண்டும். நமது ஆடைகளை உரிய இடத்தில் மடித்து வைக்கவேண்டும். வீதிகளில் செல்லும்போது தாள்களையும் பழத்தோல்களையும் கண்ட இடங்களில் வீசக்கூடாது. குப்பைத் தொட்டிகளில் போடவேண்டும். இவ்வாறு நம்மையும் நம்மைச் சுற்றியுள்ள இடங்களையும் தூய்மையாக வைத்திருத்தல் நல்ல பழக்கவழக்கங்களாகும்.

1. நாம் எவ்வாறு வாழ வேண்டும்?

___________________________________________

___________________________________________

2. நாம் எவற்றை நாள்தோறும் செய்தல் வேண்டும்?

___________________________________________

___________________________________________

3. நாம் ஆடைகளை எங்கே மடித்து வைக்க வேண்டும்?

___________________________________________

___________________________________________

4. வீதிகளில் செல்லும் போது எவற்றைக் கண்ட இடங்களில் வீசக்கூடாது?

___________________________________________

___________________________________________

5. குப்பைகளை எங்கே போடவேண்டும்?

___________________________________________

___________________________________________

புள்ளிகள் 10

## 5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| முயல்களும் | பேரிடர் | கவனமாகக் |
| எல்லோருக்கும் | உழுது | |

ஒரு காட்டில் முயல்கள் வாழ்ந்து வந்தன. அதே காட்டில் நரிகளும் வாழ்ந்து வந்தன. ஒரு முறை ஒரு பெரியவர் வந்து முயல்களிடம் ஒரு வீட்டைக் கொடுத்து இதை நீங்கள் ________ காக்க வேண்டும் எனக் கூறினார். வீட்டிற்குப் பின்புறம் இருக்கும் வயல்களைக் காட்டினார். அதை __________ பண்படுத்தி பயிர்செய்து இக்காட்டில் வாழும் __________ அறந்தவறாது நேர்வழி சென்று உதவி செய்யவேண்டும் என்று கூறினார். ____________ பெரியவர் கூறியது போலவே செய்து வந்தன. இதை அறிந்து பொறாமை கொண்ட நரிகள் அந்த வீட்டைத் தாங்கள் பறிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டன. அதனால் முயல்களுக்குப் பெருந்துன்பத்தைக் கொடுத்தன. காட்டில் வாழும் மற்றைய முயல்கள் இதைக் கேள்வியுற்றன. அந்த முயல்கள் எல்லாம் வந்து இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் முயல்களே இதனைத் தொடர்ந்தும் காக்க வேண்டும் என்று கூறின. இவ்வீட்டில் இவை இருந்தால் இக் காட்டிற்கே நல்லவை நடக்கும் என்றும் கூறின. இதையறிந்த நரிகள் இன்னும் இங்கிருந்தால் தங்களுக்கே ________ வந்து சேரும் என்று நினைத்து அவ் இடத்தைவிட்டு ஓடின.

புள்ளிகள் 10

6) **பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.**

1. மிருதங்கம் என்ற தோற்கருவியின் பண்டைய பெயர் என்ன?

_______________________________________________

_______________________________________________

2. மெய் எழுத்துகள் எத்தனை?

_______________________________________________

_______________________________________________

3. புலவர்கள் தமிழை எவ்வாறு போற்றுவர்?

_______________________________________________

_______________________________________________

4. சொற்பொருள் தருக.

தொன்மை _______________

குருகு _______________

5. மூதுரை என்ற நூலை எழுதியவர் யார்?

_______________________________________________

புள்ளிகள் 10

7) பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| கட்டி | பறந்து | மறக்க |
| குடித்த | கிடந்த | |

1. நாம் ஒருவர் செய்த உதவியை ______________ க் கூடாது.

2. பூக்களில் தேன் ______________ வண்டுகள் பறந்து சென்றன.

3. சிறுவர்கள் மணல்வீடு______________ விளையாடினர்.

4. கிளி இரை தேடிப் ______________ சென்றது.

5. பாரி கீழே ______________ முல்லைக் கொடியை தேரில் படரவிட்டான்

புள்ளிகள் 05

8) தரப்பட்டுள்ள சொற்களை உமது வாழிட மொழியில் எழுதுக.

1. பேருந்து ______________

2. நாட்காட்டி ______________

3. குதிரை ______________

4. வானவில் ______________

5. நிகழ்ச்சி ______________

புள்ளிகள் 05

9) **தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.**



ஒரு நாள் ஆமையும் முயலும்

புள்ளிகள் 15